www.tamilarangam.net

# சிந்திய இரத்தம் வீண்போகலாமா?

யூன் மாதம் 5 ஆம் திகதி !
ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மறந்து விட முடியாத நாள்.

தமிழ் இனம் அடக்கப்பட வேண்டிய இனம், ஒடுக்கப்பட வேண்டிய இனம். சிங்கள பேரினவாத அரசியல் சித்தாந்தம் இதுதான் இந்த அடித்தளத்தில் தமது அழித்தொழிப்பை நடத்தின அரசகூலிபடைகள்.

யூன்மாதம் 5 ஆம் திகதி ஒரு தமிழ் இளைஞன் அரச கூலிப்படைகளினால் சுற்றிவளைக்கப்பட்டான். அவனை உயிருடன் பிடித்துக்கொண்டுபோய் சித்திரவதை செய்து விளையாடும் பேராசை அவர்களுக்கு. காரணம் "அவன் தனது மக்களை நேசித்தான்." தனது தாயக நேசிப்பின் அர்ப்பணிப்பாகத் தன்னைத் தானே அழித்து கொண்டான். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தற்கொலைப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த போராளி சிவகுமாரன் உடல் எம்மை விட்டு பிரிந்தது. அமைப்பெதிலும் தான் இல்லாத நிலையில் கூட தன்னை விலையாக கொடுத்தான் இந்த போராளி.

அரசபடைகளுக்கு அந்த சாவு சந்தோஷசமாய் இருந்திருக்கும். சிங்கள பேரினவாத அரசுக்கு வெற்றியாக இருந்திருக்கும் ஆனால் வரலாறு அவர்களை முட்டாளாக்கியது.

தமிழ் தேசத்தின் மீதான சிங்கள தேசத்தின் திட்டமிட்ட அரசியல் - பொருளாதார - கலாச்சாரரீதியிலான ஆக்கிரமிப்பை எதிர்த்து சிவகுமாரன் குருதியிலிருந்து புதிய போராளிகள் நூறாய், ஆயிரமாய் பூத்தனர்

தனிமனிதர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அமைப்புகளால் தொடரப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்ந்தது. பல பரிமாணங்களைச் சந்தித்தது. புதிய பாடங்களைப் படித்தது. தமிழ் தேச போராளிகள் இரத்தம் சிந்தினர். அவர்களின் வழியில் தொடர்ந்தும் புதிய, புதிய போராளிகள் ஆயிரமாயிரமாய் அணிவகுத்தனர்.

ஆனாலும் .....

சிவகுமாரனிலிருந்து இன்று வரை இத்தனை போராளிகளை விலையாகக் கொடுத்து நாம் பெற்றது .....

அளவிடமுடியாத அர்பணிப்புகள், தியாகங்களும் இருந்தும் தமிழ் தேசம் சிங்கள - பேரினவாத தேசத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது எப்படி?

போராட்ட அமைப்புகளில் நேரடியாக பங்கெடுக்காது போனாலும் கூட போரின் பக்கவிளைவுகளாய் சிதைந்து, உருக்குலைந்து, துரத்தப்பட்ட மக்களின் கண்ணீர் சொல்வதென்ன?

உண்மைகள் கசப்பானவைதாம்.

எல்லாப்போராளிகளும் தமிழ் தேசத்திற்காய்தான் தமதுயிரைத் தந்தார்கள்.
தலைமைகளோ தங்களுக்காய் அதனை எடுத்து கொண்டன.

தமிழ் தேசம் சரியான அரசியலை கோருகின்றது.
போராட் அமைப்புகளாலேயே மக்கள் அரசியல் நீக்கம் செய்யப்பட்டார்கள்.
போராட்டம் தன்னைச் செழுமைப்படுத்த விமர்சனங்களை கோருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்று கருத்துள்ளவர்களோ போராட்ட அமைப்புகளாலேயே அழித்தொழிகக்கப்பட்டார்கள்.
தேச விடுதலைப் போராட்டம் தன்னைப் பலப்படுத்த ஐக்கிய முன்னணி தேவை என்கின்றது. போராளிகள் சக போராளிகளாலேயே கொல்லப்பட்டார்கள்.

இதற்கு காரணம் .....

எதிரியின் பலம், பணமும், அதிகாரமும் மட்டுமா?
எமது பலவீனமும் .....

இன்று வரை தமிழ்தேசத்திற்காய் போராடி வரும் போராளிகளே .....

தேசத்தின் விடுதலைக்காவே அமைப்பு, அமைப்புக்காக அல்ல போராட்டம்.
மக்கள் கோருவது விடுதலையையே, மேலும் சுமைகள் அல்ல.
ஆயுதங்கள் எதிரிகளைக் குறிபார்க்கவே, சக போராளிக்கல்ல.
தமிழ் தேசத்தை விடுதலை செய்வதே இலட்சியம், முஸ்லிம் தேசத்தை ஒடுக்குவதல்ல.
உங்கள் அர்ப்பணிப்புக்கள் அர்த்தமுள்ளவை, அநியாமாகிவிடக் கூடாது.
தமிழ்தேசத்திற்கு போராடுபவர்கள் இன்னும் பலர் இருக்கின்றார்கள்.
அவர்களுடன் நீங்கள் இணையத் தடையாக இருப்பவர்கள் யார்?

வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் தேச மக்களே ...

எமது தேசம் போராளிகளின் இரத்தால் சிவந்துள்ளது.
தனது பிள்ளைகளையே உரமாக்கியுள்ளளது.
கண்ணீராலும், குருதியாலும் தனது வரலாற்றை எழுதி வருகிறது.
தனது பிரஜைகளைத் தொலைத்து நிற்கிறது.

இவை அனைத்தும் விடிவிக்காகவெனில் ...

போராட்டம் பற்றிய எமது விரக்தியை களைவோம்.
அரசியல் மயப்படுவதன் அவசியத்தைப் புரிந்து கொள்வோம்.
மானுட விடுதலைக்கான மாற்றுச் சிந்தனைகளை, விமர்சனங்களை ஊக்குவிப்போம்.
பொது எதிரிகளுக்கெதிராக ஐக்கியப்படுவோம்
ஒடுக்கப்பட்ட அனைத்து இனங்களுடனும் சமத்துவ உறவைப்பேணுவோம்.

நீங்கள் தேடினால் ...

தமிழ் தேசத்தை நேசிக்கும் அரசியல் சக்திகளை இனம் காணுவது சிரமமானதல்ல.
அந்நியரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது தேசத்தை மீட்டெடுப்பது கடினமானது அல்ல.

போராளிகளின் அர்ப்பணிப்பு வீணாகக் கூடாது.

சுதந்திரமனிதராய் தாயக மண்ணில் வாழ்வதற்கான போராட்டத்தில் தமிழீழ விடுதலையை முன்னெடுப்போம்.

போராளி சிவகுமாரன் பாசறை
5.05.1998
செய்தி - 2

---

தமிழீழ விடுதலைப் போராட்டம் அது சார்ந்தவர்களையும் காவு கொள்வது தொடர்வதால், இச் செய்தி உங்களுக்கு தற்காலிகமாக இரகசிய வழிகளில் கிடைக்கின்றது. பரவலாக்குவது உங்கள் கையில்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்